# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 166/2024.
Prosecution witness for P.W. 12.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. தமிழ்செல்வன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.04.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது எட்டையபுரத்தில் குடியிருந்து எட்டையபுரம் – கோவில்பட்டி சாலையில் உள்ள அ.சா.11–ன் சியமளா பெட்ரோல் பங்க் நிலையத்தில் வேலை செய்து வருகிறேன். 04.04.2024 அன்று நான் வழக்கம்போல மேற்படி பெட்ரோல் நிலையத்திற்கு காலை சுமார் 10.30 மணியளவில் வேலைக்கு வந்தேன். அப்போது போலீசார் அங்கு வந்து கண்காணிப்பு கேமரா பதிவுகளை பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் கேமரா பதிவுகளை போலீசாருக்கு எடுத்துக் காட்டினேன். போலீசார் ஒரு பென்டிரைவ் கொடுத்தார்கள். அதில் கண்காணிப்பு கேமரா பதிவுகளை பதிவு செய்து கொடுத்தேன். 06.04.2024 அன்று போலீசார் என்னை காவல்நிலையத்திற்கு அழைத்தார்கள். அப்போது 1ம் எதிரியை தெரியுமா என்று கேட்டார்கள் தெரியும் என்று சொன்னேன். ஒரு ஒலிப்பதிவை எனக்கு போட்டு காட்டி அந்த குரல் யாருடையது என்று கேட்டார்கள். அந்த குரல்கள் 1 மற்றும் 3 எதிரிகளுக்கு சொந்தமானது என்று சொன்னேன். அந்த ஒலிப்பதிவில் 3ம் எதிரி வீட்டில் குடும்ப பிரச்சனை இருப்பதாகவும், அவருக்கு பணம் தேவைப்படுவதாகவும் அது குறித்து 3ம் எதிரி 1ம் எதிரியிடம்சொன்னபோது 1ம் எதிரி 3ம் எதிரியின் லாரியை கொடுக்குமாறு கேட்டுள்ளார். 3ம் எதிரி சரி எடுத்துச்செல் என்றும் சொன்னார். மேற்படி லாரிக்கு 01.04.2024 அன்று

எங்கள் பெட்ரோல் நிலையத்தில்தான் டீசல் போடப்பட்டது. மேற்படி லாரி டீசல் போட்டுக் கொண்டு எட்டையபுரம் நோக்கி போயிருக்கிறது. சுமார் 30 நிமிடங்கள் கழித்து மேற்படி லாரி எட்டையபுரத்திலிருந்து திரும்பி வந்தது. அந்த காட்சிகளை கண்காணிப்பு கேமரா பதிவுகளில் இருந்ததை நான் போலீசாருக்கு காட்டினேன். மேற்படி உரையாடலை மேற்படி பென்டிரைவ்வில் நான் பதிவு செய்து கொடுத்தேன். மேற்படி குரல்கள் 1, 3 எதிரிகளுக்கு சொந்தமானதா என்று கேட்டார்கள். ஆமாம் என்று சொன்னேன். மேற்படி லாரி வழக்கமாக எங்கள் பெட்ரோல் நிலையத்தில்தான் இருக்கும். 1ம் எதிரியும் மேற்படி லாரியின் ஓட்டுநராக வந்து எங்கள் பெட்ரோல் பங்கில் டீசல் போடுவார். 3ம் எதிரி எங்கள் பெட்ரோல் நிலையத்தில் பின்புறமாக உள்ள அறையில் தங்குவார். விபத்து நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நான் பெட்ரோல் நிலையத்திற்கு வரவில்லை. விடுப்பு எடுத்திருந்தேன். 06.04.2024 அன்று போலீசார் மேற்படி சம்பவம் விபத்து அல்ல என்றும், கொலை என்றும் சொன்னார்கள். மேற்படி ஒலிப்பதிவில் உள்ள குரல்கள் 1, 3 எதிரிகளுக்கு சொந்தமானதா என்றும் என்னை விசாரித்தார்கள். விபத்தில் இறந்துபோனதாக சொல்லப்படும் நபரின் பெயரில் கே.எஸ்.துரை. சிகேடி பள்ளியிலிருந்து சுமார் அரை கிலோமீட்டர் தூரத்தில் சம்பவம் நடந்ததாக கேள்விப்பட்டேன். மேற்படி சம்பவம் டாரஸ் லாரி மூலமாக நடத்தியதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி ஒளிப்பதிவுகளை நான் பென்டிரைவில் பதிவு செய்து கொடுத்தற்காக நான் வழங்கிய சான்று **அ.சா.ஆ 9**. இந்த ஆவணம் எதிரிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது.

1, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பி.ஏ., தமிழ் இலக்கியம் படித்துள்ளேன். நான் கணினி கோர்ஸ் எதுவும் படிக்கவில்லை. கண்காணிப்பு கேமரா பதிவுகளில் உள்ள தேதியை மாற்றலாம் என்றால் மாற்ற முடியாது என்று நினைக்கிறேன். கண்காணிப்பு கேமரா பதிவுகளை வேறு தேதிகளுக்கு Settings –க்குள் சென்று மாற்றிக் கொள்ளலாம் என்றால் எனக்கு அந்த அளவுக்கு தெரியாது. அதனால் கண்காணிப்பு கேமரா

பதிவுகள் சம்பந்தமாக நிபுணத்துவம் எனக்கில்லை. 01.04.2024 நான் பெட்ரோல் நிலையத்திற்கு செல்லவில்லை என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். மேற்படி பென்டிரைவ் எந்த நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த பென்டிரைவில் மேற்படி பதிவுகளை சுமார் 15 நிமிடத்தில் பதிவு செய்து கொடுத்தேன். 04.04.2024 அன்று மேற்படி பதிவுகளை பதிவு செய்து கொடுத்தேன். எத்தனை மணிக்கு பதிவு செய்து கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. மேற்படி நிலையத்தில் எனக்கு வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பும் வேலையைத் தவிர வேறு வேலை இல்லை என்றால் சரிதான். பெட்ரோல் நிலையத்திற்கு ஒரு நாளைக்கு சுமார் ஆயிரம்பேர் வருவார்களா என்றால் அதற்கு மேல் வருவார்கள். ஒவ்வொரு நாளும் வரக்கூடிய வாடிக்கையாளர்களின் குரல் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தினமும் வருபவர்களின் குரல் எனக்கு தெரியும். நான் குரல் சோதனை குறித்து எந்த கோர்ஸ்ம் படிக்கவில்லை. அ.சா.1–ஐ எனக்கு தெரியாது. அ.சா.1–ன் ஏற்பாட்டிலும், போலீசார் சொல்லிக் கொடுத்தும் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1, 3 எதிரிகள் எந்த ஊரில் குடியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியும். 1ம் எதிரி வேறு ஒரு வாகனத்தின் ஓட்டுநர் என்றும், அதில் டீசல் போடுவதற்காக வருவார் என்றும் சொன்னால் சரிதான். போலீசார் கண்காணிப்பு கேமரா பதிவுகளை கேட்டபோது 1, 3 எதிரிகளை அழைத்து வரவில்லை. நான் பென்டிரைவில் பதிவு செய்து கொடுத்த அன்று பெட்ரோல் நிலையத்தில் வைத்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை. 04.04.2024 அன்று பென்டிரைவில் உள்ள விபரங்களை பற்றி நான் சொல்லவில்லை. 06.04.2024 அன்று காவல்நிலையத்தில் யார் என்னை விசாரித்தார்கள் என்றால் ஒரு சார் என்னை விசாரித்தார். அவரை எப்படி அழைப்பது என்று தெரியாமல் அண்ணா என்று அழைத்தேன். அவர் போலீசார்தான். காவல்துறை அதிகாரிகளின் பதவி நிலை பற்றி எனக்கு தெரியாது. அதனால் அன்றைய தேதியில் என்னை விசாரித்த போலீசார் எந்த பதவி நிலையில் இருந்தார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தபோது அதை எழுதிக்

கொண்டார்கள். என்னை விசாரித்தவர்தான் எழுதிக் கொண்டார். அதில் நான் கையொப்பமிட்டேன். கண்காணிப்பு கேமரா எப்படி வேலை செய்கிறது என்பதற்கான தொழில்நுட்பம் எனக்கு தெரியாது. அ.சா.ஆ 9 சான்றிதழை போலீசார் தட்டச்சு செய்தார்கள். கணினி மையத்தில் தட்டச்சு செய்தார்கள். அந்த கணினி மையம் எட்டையபுரத்தில் உள்ளது. கண்காணிப்பு கேமராவை இயக்க எனக்கு தெரியும் என்றும், அதிலிருந்து பென்டிரைவில் பதிவு செய்து கொடுத்ததாகவும் அ.சா.ஆ 9–ல் சொல்லப்பட்டுள்ளது. அதைத் தவிர அ.சா.ஆ 9–ல் வேறு விபரங்கள் சொல்லப்பட்டிருந்தால் அந்த விபரங்கள் என்னால் சொல்லப்பட்டதல்ல என்றால் சரிதான். எனக்கு பெட்ரோல் நிலையத்தில் மாத சம்பளம்தான். பெட்ரோல் நிலையத்தில் நான் கையெப்பமிட்டு சம்பளம் வாங்குவதில்லை. நான் மேற்படி பெட்ரோல் நிலையத்தில் வேலை செய்வதற்கு ஆதாரம் இல்லை என்றால் வருகை பதிவேடு உள்ளது. வருகை பதிவேட்டை போலீசார் எடுத்துச் சென்றார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் மேற்படி பெட்ரோல் நிலையத்தில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னை இந்த வழக்கிற்காக சாட்சியாக போட்டு எப்படி சாட்சியம் அளிக்க வேண்டுமென்று சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஒளிப்பதிவிற்கும், ஒலிப்பதிவிற்கும் நிபுணர் அல்ல என்றால் சரிதான். 1, 3 எதிரிகள் பெட்ரோல் நிலையத்திற்கு டீசல் போட வருவதாகவும், 3ம் எதிரி அங்கு இருக்கும் அறையில் தங்குவதாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அ.சா.ஆ 9 சான்றிதழ் வழங்க எனக்கு அதிகாரம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. 01.04.2024 அன்று நான் விடுப்பில் இருந்ததால் மேற்படி பெட்ரோல் நிலையத்தில் யார், எப்போது வந்து டீசல் போட்டார்கள் என்பது எனக்கு எதுவும் தெரியாது. கண்காணிப்பு கேமரா பதிவுகளை பார்த்து தெரிந்து கொண்டேன்.

3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

01.04.2024–ல் நான் மேற்படி பெட்ரோல் நிலையத்தில் நான் பணியில் இல்லை. அந்த தேதியில் மேற்படி நிலைய நிர்வாகத்தில் யார் நிர்வாக பொறுப்பில்

இருந்தார் என்பது எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி கண்காணிப்பு கேமரா மற்றும் கணினி, நிர்வாக அறை ஆகியவற்றை நிர்வகிக்கும் அதிகாரி நான் அல்ல என்றால் சரிதான். நிர்வாகத்தில் உள்ள அறைக்குள் உள்ள பொருட்கள் சம்பந்தமாக பெட்ரோல் நிலைய உரிமையாளர் அனுமதி இல்லாமல் யாரும் எதுவும் செய்யமுடியாது என்றால் சரிதான். 01.04.2024 அன்று கண்காணிப்பு கேமரா பதிவுகள் முறையாக செயல்பட்டதா அல்லது அதை வேறு யாராவது மாறுதல்கள் செய்துள்ளார்களா என்பது எனக்கு தெரியாது. DVR என்பது ஒளிப்பதிவு காட்சி பதிவுகள் உள்ள Hard Disk என்றால் சரிதான். அந்த Hard Disk –க்கை தனியாக எடுத்துவிட்டு வேறு ஒரு Hard Disk பொருத்திக் கொள்ளலாம் என்றால் சரிதான். ஒவ்வொரு Hard Disk–கிற்கும் ஒரு IP விலாசம் உண்டு என்றால் எனக்கு தெரியாது. நான் பதிவு செய்து கொடுத்த Hard Disk அதற்கு முந்தைய பதிவுகளிலிருந்து தொடர்ச்சியான பதிவுகளா அல்லது வேறு Hard Disk மாற்றப்பட்டதா என்பது எனக்கு தெரியாது. அதேபோல் ஒவ்வொரு பென்டிரைவ்விற்கும் ஒவ்வொரு IP விலாசம் உண்டு என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் 06.04.2024 அன்று போலீசார் என்னை நிலையம் அழைத்துச் சென்று அங்கு காட்சிகளை எனக்கு காட்டினார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கேட்ட ஒலிப்பதிவில் காட்சிகள் எதுவும் இல்லை என்றும், ஒலிப்பதிவு மட்டும்தான் இருந்தது என்றும் சொன்னால் சரிதான். மேற்படி பெட்ரோல் இருக்கும் சாலை தூத்துக்குடி – இராமேஸ்வரம் பிரதான சாலை என்பதால் அடிக்கடி விபத்து ஏற்படுவதால் வாரம் இரண்டு, மூன்று முறை போலீசார் பெட்ரோல்நிலையம் வந்து கண்காணிப்பு கேமரா பதிவுகளை பார்ப்பார்கள் என்றால் சரிதான். அதை போலீசாரே வந்து இயக்கி பார்த்துவிட்டு செல்வார்கள் என்றால் சரிதான். 06.04.2024 அன்று போலீசார் எத்தனை தாள்களில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் ஞாபகமில்லை. முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. அவை எனக்கு நேரில் தெரிந்தவை அல்ல. நான் பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.04.24 19:29:24 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.